DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **STC 1/2024** |
| Deposition of Witness for | : PW 1 |
| Name | :சுடலி |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 25.07.2025 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 025th **July 2025.**

**எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது சங்கரன்கோவிலில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. விபத்தில் காயம் பட்ட கார்த்திக் எனது அண்ணன் மகன். 10 வருடத்திற்கு முன்பு ஒரு நாள் எனது அண்ணன் மகன் கார்த்திக் என்பவரும் அவருடன் அவரது நண்பர் வினோத் என்பவரும் இருசக்கரவாகனத்தில் எனது வீட்டிற்கு வந்துவிட்டு திரும்ப தாலையூத்து போகும்போது குருக்கள்பட்டி பக்கம்போகும்போது ஒரு அரசுப்பேருந்து மோதி விபத்து ஏற்பட்டதாக எனக்கு தகவல் சொன்னார்கள். நான் சம்பவம் கேள்விப்பட்டு சங்கரனகோவில் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது கார்த்திக் கால் உடைந்திருந்தது. அவர் கோமா ஸ்டேஜ்க்கு போய்விட்டார். திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்காக கொண்டு சென்றார்கள். நானும் உடன் சென்றேன். பின்பு திருநெல்வேலி அரசு

மருத்துமவனையில் 2 மாதங்களாக கார்த்திக் சிக்சை பெற்றார். கார்த்திக் நண்பர் வினோத்திற்கும் காலில் காயம் ஏற்பட்டு எலும்பு உடைந்துவிட்டது. வினோத்திற்கும் சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை அளித்துவிட்டு திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் மேல்சிகிச்சைக்காக அனுப்பிவைத்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். மேற்படி கையெழுத்தை நான் திருநெல்வேலி அரசு மருததுமவனையில் வைத்து போட்டுக்கொடுத்தேன். **அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

எனக்கு எழுதப்படிக்கத்தெரியுமா என்றால் படிக்கத்தெரியாது. கையெழுத்து மட்டும் போடுவேன். புகார் வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சம்பவம் நடந்தது பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் முதல்விசாரணையில் கூறிய விபரங்களைத்தான் போலீசார் விசாரணையிலும் கூறினேன் என்றால் சரிதான். எனக்கு திருமணமாகி எவ்வளவு வருடங்கள் ஆகிறது என்றால் 32 வருடங்கள் ஆகிறது. விபத்தில் காயம் ஏற்பட்ட கார்த்திக்கிற்கு திருமணம் ஆகவில்லை என்றால் சரிதான். விபத்து நடந்த சமயத்தில் எனது தாய் தந்தை உயிருடன் இல்லை என்றால் சரிதான். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது என்றால் சரிதான். விபத்து பற்றிய தகவலை யார் என்னிடம் கூறினார்கள் என்றால் எனது அண்ணனின் மனைவி கூறினார். விபத்து பற்றிய தகவலை எனது அண்ணனின் மனைவி என்னிடம் கூறியது பற்றி புகார் வாக்குமூலத்தில் கூறியுள்ளனோ என்றால் கூறவில்லை. அரசு மருத்துவமனைக்கு கார்த்திக்கை பார்ப்பதற்கு நான் மட்டும் சென்ற விபரத்தை புகார் வாக்குமூலத்தில் கூறியுள்ளனோ என்றால் கூறவில்லை. விபத்து அரசுப்பேருந்தால்

ஏற்படுத்தப்படவில்லை என்றாலும், இவ்வழகது இழப்பீடு கோருவதற்காக பொய்யாக பதிவு செய்ய்பபட்டது என்றாலும், நான் இவ்வழக்கில் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், வழக்கிற்கும் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | | |
|---|---|---|
| Calendar | | --- |
| Miscellaneous | | --- |
| Preliminary Register | : | **STC 1/2024** |
| Deposition of Witness for | : | PW 2 |
| Name | : | கார்த்திக் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |
| Date | : | 25.07.2025 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 025th July 2025.

**எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது மேலத்தாலையூத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. சுமார் 10 வருடத்திற்கு முன்பு நானும், எனது நண்பர் வினோத் என்பவரும் இருசக்கரவாகனத்தில் சங்கரன்கோவிலில் உள்ள எனது அத்தை வீட்டிற்கு வந்தோம். திரும்ப ஊருக்குபோகும்போது இரவு சுமார் 10.30–11 மணியளவில் குருக்கள்பட்டி அருகில் உள்ள ஒரு வளைவில் செல்லும்போது இருசக்கரவாகனத்தை நான்தான் ஓட்டினேன். எனக்கு எதிரே வந்த அரசுப்பேருந்து மோதி நான் கீழே விழுந்துவிட்டேன். அதன்பிறகு நான் கோமா நிலைக்கு போய்விட்டேன். 20 நாட்கள் கழித்து திருநெல்வேலி அரசு மருததுவமனையில் வைத்துதான் எனக்கு சுயநினைவு வந்தது. எனது வலது கால் உடைந்து பிளேட் வைக்கப்பட்டுள்ளது. எனது வலது கை

ஆட்காட்டிவிரலில் காயம் ஏற்பட்டது. எனது வலது கண் புருவத்தில் காயம் ஏற்பட்டது. வினோத்திற்கு வலது கால் பாதத்திற்கு அருகில் காயம் ஏற்பட்டது. அவரது நெற்றியிலும் காயம் ஏற்பட்டது. போலீசார் என்னை விசாரித்தார்களா என்று எனக்கு ஞாபகம் இல்லை.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் சங்கரன்கோவிலிருந்து தாலையூத்து செல்லும்போது இரவு 11 மணி இருக்கும் என்றால் சரிதான். மேற்கூறியவாறு நான் பயணித்துக் கொண்டிருந்தபோது எனக்கு எதிரில் வந்த வாகனம் எது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். இரவில் எதிரில் வந்த வாகனம் எது என்று தெரியாமல் நானே கீழே விழுந்துவிட்டு இழப்பீடு கோருவதற்காக பொய்யாக இவ்வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும், எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.